# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

# FAST TRACK COURT, ARANI.

## S.C.No.163/2018

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.16** |
| **Name** | **:** | **Dr. C.Sathiya** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**எதிரிகள் 1 முதல் 6 ஆஜர். 7 முதல் 10 எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18.08.2023.**

**முதல் விசாரணை -**

**நான் தற்போது தாம்பரம் சானிடோரியம் அரசு மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் 21.1.2017 அன்று அதிகாலை 1.02 மணி அளவில் காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது, 38 வயதுடைய ஆண் சுரேஷ் த/பெ. ஜெகன்நாதன் அவரை உறவினர் ஒருவர் அழைத்து வந்திருந்தார்.**

அவரை 20.1.2017 அன்று இரவு 9.15 மணி அளவில் வயலாத்தூர் என்ற இடத்தில் 5 தெரிந்த நபர்கள் அவரை உருட்டு கட்டையால் தாக்கியதாக கூறினார். நான் அவரை பரிசோதிக்கும்போது அவர் உயிருடன் இல்லை. அவருடைய இரண்டு கண் பாவையும் நிரந்தரமாக விரிந்து இருந்தது. மற்றும் கீழ்கண்ட காயங்கள் இருந்தது.

1) 4x1x1 செ.மீ அளவில் கிழிந்த காயம் அவருடைய உட்புற தலையின் இடது பக்கம் இருந்தது.

2) 3x1x1 செ.மீ அளவில் கிழிந்த காயம் அவருடைய நடுப்புற தலையில் இடது பக்கம் இருந்தது.

3) 1x1 செ.மீ அளவில் இரண்டு சிராய்ப்பு காயம் அவருடைய வலது புற கழுத்தில் இருந்தது. மற்றும் அதே இடத்தில் 5x2 செ.மீ அளவில் ரத்த கட்டு இருந்தது. நான் அவருடைய உடலை சவ கிடங்கில் வைக்க பரிந்துரை செய்தேன். நான் வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.25. இதுசம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் வெட்டு காயங்கள் எதையும் பார்க்கவில்லை என்றால் சரி தான். நக குறி காயங்கள் ஏதும் பார்க்கவில்லை என்றால் சரி தான். இடது கழுத்தில் காயங்கள் ஏதும் இல்லை என்றால் சரி தான். தெரிந்த நபர்கள் தாக்கியதில் ஆண் பெண் என்ற குறிப்பு இல்லை என்றால் சரி தான். இருசக்கர வாகனத்தில் செல்லும் நபர் நிலைதடுமாறி புதர்கள் அடர்ந்த பகுதியில் தலைகவசம் அணிந்து செல்லும்போது தலைக்கவசம் கீழே விழும்போது விழும் புதரில் கற்கள் இருந்தால் மேற்கண்ட 1 முதல் 3 காயங்கள் ஏற்பட

வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு.

அவ்வாறு விழும்போது தலைகவசம் கழுத்தில் அழுத்தப்படும்போது ரத்த கட்டு காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரி தான். ஹெல்மெட்டின் பகுதி உடைந்து, உடைந்த ஹெல்மெட்டினால் கழுத்தில் ஏற்பட்ட சிராய்ப்பு காயம் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு. தலைகவசம் கழுத்தில் அழுத்தப்படும்போது மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டு மரணம் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு.

<u>1 முதல் 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை 7 முதல் 10 எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொள்வதாக எடுத்துரைக்கப்பட்டது.</u>

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.